



## வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் முன் அறிந்திருக்க வேண்டியவை

# ✓ செய்ய வேண்டியவை

DO's

- ✓ சட்டப்படியான ஆவணங்கள் மற்றும் வேலைக்கான விசாவுடன் முறையாக வெளிநாடு செல்ல வேண்டும்.
- ✓ அனைத்து ஆவணங்களின் நகல்களையும் குடும்பத்தினர் மற்றும் தன்வசம் கூடுதலாக வைத்திருக்க வேண்டும்.
- ✓ அரசு பதிவு பெற்ற முகவர்கள் மூலமாகவே வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்றிட வேண்டும்.
- ✓ வேலை செய்யும் நாட்டின் சட்ட திட்டங்களே அனைவருக்கும் பொருந்தும். வேலைக்குச் செல்லும் நாட்டின் உள் நாட்டு சட்ட திட்டங்கள் மற்றும் கலாச்சாரங்களை மதித்து நடந்திட வேண்டும்.
- ✓ வெளிநாடுகளில் பணிபுரியும் இடங்களிலிருந்து "வெளிச் செல் விசா" (Exit Permit) பெற்றிடாமல் நாடு திரும்ப இயலாது.
- ✓ ஒப்பந்த காலத்தில் பணிபுரியும் நிறுவனம் / முகவர் தவிர வேறு நிறுவனம் / முகவரிடம் வேலைக்குச் செல்வதில் வரையறைகள் உள்ளது என்பதனை அறிந்திருக்க வேண்டும்.
- ✓ வேலைக்கான ஒப்பந்தத்தையும் அதன் நகலையும் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும். வேலைக்குச் செல்பவரின் உரிமைகள், பொறுப்புகள், ஊதியம், வேலையின் தன்மை போன்ற தகவல்கள் அதில் தான் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- ✓ வெளிநாடுகளில் பிரச்சனைகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக இந்தியத் தூதரகத்தை அணுக வேண்டும். எனவே, வேலைக்குச் செல்லும் நாட்டிலுள்ள இந்தியத்தூதரகங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்களை கைவசம் வைத்திருக்க வேண்டும்.


பொது மக்கள் நலன் கருதி வெளியிடுவோர்

**அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் – சேப்பாக்கம், சென்னை –5**

அலுவலக தொலை பேசி எண். 044–28515288

மின்னஞ்சல் முகவரி nrtchennai@tn.gov.in / nrtchennai@gmail.com

இணையதள முகவரி: https://emigrate.gov.in/ext/ | http://madad.gov.in

மதத் : mrcchennai2015@gmail.com / தொலை பேசி எண். 90425 52514





## வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் முன் அறிந்திருக்க வேண்டியவை

### ✕ செய்யக் கூடாதவை

DON'Ts

- ✕ யாதொரு குற்றச்செயல்களிலும் ஈடுபடக் கூடாது. குற்றச் செயல்களுக்காக வேலை செய்யும் நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ அதற்கான குற்ற வழக்கு தொடரப்படும்.
- ✕ வெளிநாடுகளில் போராட்டம் நடத்தவோ சங்கம் அமைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது. மீறி அவற்றில் கலந்து கொள்பவர்கள் நாடு கடத்தப்படலாம் அல்லது சிறை செல்ல நேரிடலாம்.
- ✕ கண்டிப்பாக மது வகைகள், போதை பொருட்கள், கடத்தல் பொருட்கள் போன்றவை கொண்டு செல்லக் கூடாது.
- ✕ போதை பொருட்கள், மது வகைகள், திருட்டு, கொள்ளை, ஆபாச வார்த்தைகள் மற்றும் காட்சிகள் போன்றவற்றை பயன்படுத்துவோருக்கு ஆயுள் தண்டனை முதல் மரண தண்டனை வரை கிடைத்திட வாய்ப்புள்ளது.
- ✕ உள்ளூர் அலுவலர்களின் முறையான அனுமதியின்றி வேறு நிறுவனத்திலோ, முகவர்களிடமோ வேலைக்குச் செல்லக் கூடாது. வாய் மொழியான உத்தரவாதங்களைத் தவிர்த்து, முறையான ஆவணங்களை வலியுறுத்திட வேண்டும்.


<u>பொது மக்கள் நலன் கருதி வெளியிடுவோர்</u>

**அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் – சேப்பாக்கம், சென்னை –5**

அலுவலக தொலை பேசி எண். 044–28515288

மின்னஞ்சல் முகவரி nrtchennai@tn.gov.in / nrtchennai@gmail.com

இணையதள முகவரி: https://emigrate.gov.in/ext/ | http://madad.gov.in

மதத் : mrcchennai2015@gmail.com / தொலை பேசி எண். 90425 52514